# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஸ்பெயினிலுள்ள பஷாரத் பள்ளிவாயிலில் 09.04.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

மார்க்கத்திற்கு உயிரூட்டுவது தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பணியாகும் என்று நான் சென்ற குத்பாவில் கூறினேன்.

அந்த மார்க்கம் காலம் செல்லச் செல்ல தனது மகத்துவத்தை இழந்து கொண்டே வந்தது. மார்க்கத்தின் உயிர்த்துடிப்பு தென்படவில்லை. எல்லா புறமிருந்தும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. உலகியல்ரீதியாக மார்க்கமும் இஸ்லாத்தின் பெயரையே இந்த நாட்டிலிருந்து எடுக்கும் அளவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டது. இஸ்லாத்தில் நிலைநிற்க விரும்புபவரைக் கூட கிறித்தவ மன்னர்கள் குறி வைத்து பலவந்தமாக கிறித்தவர் ஆக்கிவிட்டனர். அல்லது குறைந்தபட்சம் வெளிப்படையாகவும் கிறித்தவத்தை ஒப்புக் கொள்ள வைத்துவிட்டனர். பிறகு சிறிது சிறிதாக அவர்களின் சந்ததிகளிடமிருந்து இஸ்லாம் முடிந்து போய் விட்டது. மார்க்க ரீதியாக இஸ்லாத்தின் நிலை எவ்வாறிருந்தது என்றால், ஒவ்வொரு இடத்திலும் கிறித்தவ பாதிரிகள் தமது தந்திரமான பேச்சுக்களால் முஸ்லிம்களை கிறித்தவர்களாக்கிக் கொண்டிருந்தனர். வேறு விதமாக சொல்வதாக இருந்தால், முஸ்லிம்கள் தமது ஆன்மீக பலவீனத்தின் காரணமாக அவர்களின் தந்திரத்தில் மயங்கிவிட்டனர். இந்தியாவில் அவ்லியாக்கள், இஸ்லாமிய பெரியார்கள் அதிகமாக இருந்தனர். இங்கும் கூட இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கிறித்தவத்தின் வலையில் வீழ்ந்து ஆன்மீக மரணத்திற்கு ஆளாகிக் கொண்டிருந்தனர். அப்போது அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை உருவாக்கி இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான ஏற்பாட்டை செய்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து ஞானத்தைப் பெற்று பல்வேறு மார்க்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற அனைவரிடமும், இஸ்லாத்தின் அழகிய போதனைதான் உயர்ந்தது என்று நிரூபித்துக் காட்டினார்கள்.

கிறித்தவ பாதிரிகள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட மேன்மையை வழங்கினார்கள். கிறித்தவ பாதிரிகள் முழு இந்தியாவிலும் வெற்றி பெற்று விடுவோம் என்று அப்போது பேசிக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வருகைக்குப் பிறகு அந்த கிறித்தவர்கள் தம்மை தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளாகிவிட்டனர். அதுமட்டுமின்றி (தப்லீக்)களத்தை விட்டு ஓடியும் விட்டனர். தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு, அஹ்மதிகளிடம் எந்த விவாதமும் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற வழிகாட்டலையும் வழங்கினார்கள். அவ்வாறு அவர்களுடன் விவாதம் வைத்தால் உங்களை (கிறித்தவ)மார்க்கத்திலிருந்து வெளியேற்றி விடுவார்கள் என்றும் அறிவுரை கூறினார்கள்.

கிறித்தவர்கள் எந்த அளவுக்கு இதனை ஏற்றுக் கொண்டனர் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்து வைக்கின்ற இஸ்லாம், அவர்கள் எடுத்து வைக்கின்ற போதனைகளால் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் மகத்துவம் மீண்டும் உயரத் தொடங்கி விட்டது. இந்த புதிய போதனை அந்த பணியைச் செய்து விட்டது என்று கருதினர். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்டு வந்தது புதிய போதனையன்று. கிறித்தவர்கள் இதுவரை கேள்விப்படாத விஷயமாக இருந்ததால் அவர்களுக்கு புதிதாக தெரிந்தது. அது புதிய போதனையல்ல. அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறந்தவர்களை உயிர்ப்பிப்பவர்களாக இருந்தார்கள். அன்னார் அல்லாஹ்விடமிருந்து ஞானத்தைப் பெற்று அதனை செய்து காட்டினார்கள். எல்லா மார்க்கங்களை விட இஸ்லாத்தின் சிறப்பு உயர்ந்தது என்று நிரூபித்துக் காட்டினார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று,

இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் பணியில் ஒவ்வொரு அஹ்மதிக்கும் பங்கு உள்ளது. தமது நிலைமைகளை மாற்றுவதன் பக்கம் கவனம் செலுத்தியவாறு தமது செயல்பாடுகள் மூலம் ஸ்பெயினின் ஒவ்வொரு அஹ்மதியும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். சோம்பலை அகற்ற வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் தரப்பட்ட சான்றுகள் மற்றும் ஆன்மீக அருள்களில் இருந்து பயன் பெற்றவாறு நமது தப்லீகை இந்த நாட்டில் அதிகப்படுத்த வேண்டும்.

மேலும் இக்காலத்தில் கிறித்தவர்களில் பெரும்பாலார் மார்க்கத்திலிருந்து விலகி உள்ளார்கள். முதலில் இவர்களுக்கு மார்க்கத்தின் அவசியம், இறை இருப்பின் பக்கம் கவனம் செலுத்துவது ஆகியவற்றைப் பற்றி புரிய வைக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று இதற்காக நாம் செயல் முன்மாதிரியைக் காட்டுவதும், ஆன்மீக முன்னேற்றம் பெறுவதும் அவசியமாகும். தக்வாவில் முன்னேற்றம் மிக அவசியமானதாகும். எதுவரை ஆன்மீக முன்னேற்றம் பெறவில்லையோ அதுவரை நமது தப்லீகிலும் பரக்கத் ஏற்பட முடியாது. எல்லா மார்க்கங்களின் மீது வெற்றி பெறுவதும் இறைவனின் தக்தீர்களில் ஒரு தக்தீர் ஆகும். உண்மையான உயிருள்ள மார்க்கம் இஸ்லாம்தான்; இஸ்லாம் மட்டும்தான் என்பது இறை தீர்ப்பு ஆகும். ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவது மட்டும்தான் அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுத் தரும் என்பதும் அல்லாஹ்வுடைய பிரகடனம் ஆகும். அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப அவனது கட்டளைகளுக்குள் நம்மை நாம் கொண்டு வருவதே ஈடேற்றத்திற்குரிய வழியாகும்.

எனவே இந்த நோக்கத்திற்காக முயற்சி செய்வதும், துஆ செய்வதும் அவசியமாகும். இதுவே நம்மிடம் ஏற்படுத்த வேண்டியதாகும். இதுவே உலகத்திலும் ஈடேற்றத்தை பெற்றுத் தரும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உலகில் எல்லா பகுதியிலும் வாழும் அனைத்து உயிர்களையும் நோக்கி, அவர்கள் ஐரோப்பாவில் இருந்தாலும் சரி, ஆசியாவில் இருந்தாலும் சரி, அவர்களுள் நல்லியல்பு கொண்டோர்களை தவ்ஹீதின் பக்கம் ஈர்த்து, ஒரே மார்க்கத்தில் அவர்களை ஒன்றிணைக்க வேண்டும் என்று அல்லாஹ் நாடுகிறான். இதுவே இறைவனின் நோக்கமாகும். இதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். நீங்கள் இந்த நோக்கத்தை பின்பற்றுங்கள். ஆனால் மென்மையுடனும் நல்லொழுக்கத்துடனும், துஆவில் அழுத்தம் கொடுத்தவாறும் இதனை செய்யுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த நோக்கத்திற்காக அனுப்பப்பட்டார்களோ அதனை பெறுவது நம்மீதும் பொறுப்பாகும். இதற்கான தகுதியைப் பெறுவதற்காக முயற்சி செய்யுங்கள். இன்று ஐரோப்பா மட்டுமின்றி முழு உலகமும் மார்க்கத்தின் பெயரால் ஷிர்க்கில் மூழ்கி உள்ளன. இறைவனது இருப்பையே மறுக்கின்றன. நீங்கள் ஐரோப்பாவில் இருப்பதால் ஐரோப்பாவைப் பற்றி பேசுகிறேன். பிறகு நான் ஏற்கனவே கூறியது போன்று, இந்த நாட்டில் லாயிலாஹ இல்லல்லாஹ் அல்லாஹு அக்பர் என்ற குரல் எல்லா பக்கமும் சத்தமாகக் கேட்கும் நிலை ஒரு காலத்தில் இருந்தது. பல்வேறு இடங்களில் பள்ளிவாசல்கள் சாட்சி அளிக்கின்றன. பல்வேறு இடங்களில் சுவர்களில் எழுதப்பட்ட வாசகங்கள் இந்த நாட்டில் தவ்ஹீதுடைய அறிவிப்பின் நறுமணம் ஒரு காலத்தில் கமழ்ந்தது என்று காட்டுகிறது. ஆனால் இப்போது போய் விட்டது. நமது மக்களின் ஆன்மீக வீழ்ச்சியால், தவ்ஹீதை பாதுகாக்க முடியாமற் போனதால், தமது வீழ்ச்சிக்கு தாமே ஏற்பாடு செய்து கொண்டனர் என்பது மட்டுமின்றி இந்த நாட்டையும் திரித்துவம் என்ற பள்ளத்தில் போட்டு விட்டனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:** உலகத்தை தவ்ஹீதில் நிலைநாட்டுங்கள். ஒரே மார்க்கத்தின் பக்கம் ஈர்த்து வாருங்கள்.

இந்த நோக்கத்திற்காகவே அவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இக்காலத்தில் படைத்தான்.

தனது சிறப்பான அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் இணைவதற்கு தவ்ஃபீக் வழங்கியுள்ளான். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் செய்வது மட்டுமே நமது வாழ்வின் கடைசி இலக்கு என்று கூறவில்லை. மாறாக எனது வருகையின் நோக்கம் தவ்ஹீதை நிலைநாட்டுதலும், உலகத்தை ஒரே மார்க்கத்தில் ஒன்றுசேர்ப்பதும் ஆகும். இதற்காக என்னைப் பின்பற்றுங்கள். அப்போதுதான் எனது வருகையின் நோக்கத்தை நீங்கள் நிலைநாட்ட முடியும். ஆனால் மென்மையுடன் செய்ய வேண்டும். உங்களிடம் சான்றுகள் இருந்தால் மட்டுமே மென்மையும் வரும். நமது எதிரிகள் நமக்கு எதிராக கடுமையான வார்த்தைகளை பயன்படுத்துகின்றனர். காரணம் அவர்களிடம் ஆதாரம் இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

குர்ஆனின் ஆதாரங்களை நான் எந்த அளவுக்கு தந்துள்ளேன் எனில் நீங்கள் கோப்படவே தேவையில்லை. நீங்கள் பேசும்போது உங்கள் பேச்சில் மென்மையைக் கையாளுங்கள். இஸ்லாமிய போதனை மிகச்சிறந்த போதனை என்று நிரூபித்துக் காட்டுங்கள். அதனை பரப்புவதற்கு வாள் தேவையில்லை. அது ஒளியாகும். நல்லியல்பு கொண்டவர்களை அந்த ஒளி ஈர்க்கிறது. அவர்களின் நல்லொழுக்கத் தகுதியை உயர்த்துகிறது. அல்லாஹ்வின் உரிமைகளை வழங்குமாறு போதிக்கும் அதே வேளையில் இஸ்லாமிய போதனையில் அடியார்களின் உரிமையை வழங்குவதற்கான போதனையும் தந்துள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு அடிப்படை விஷயத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். உங்கள் முயற்சிகளை துஆவுடன் செய்யாத வரை வெற்றி கிடைக்காது. தவ்ஹீதை நிலைநாட்ட ஒரே மார்க்கத்தைப் பரப்ப ஒரே வழி ஆன்மீக முன்னேற்றம் ஆகும். எதுவரை துஆவின் மூலம் உங்கள் தொடர்பை இறைவனுடன் ஏற்படுத்தவில்லையோ அதுவரை ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட முடியாது. ஒரு வேலை இறைவனுக்காக – அவன் பக்கம் அழைப்பதற்காக நடக்கும் எனில் அவ்வேலை இறைவனுக்கும் மிகவும் பிரியமானது. அவனுடன் உயிருள்ள ஒரு தொடர்பை ஏற்படுத்தாமல் இவ்வேலையை எப்படி செய்ய முடியும்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த நுட்பத்தின் பக்கம் தான் நம்மை கவனமூட்டியுள்ளார்கள். துஆவின் மூலம் பயனடையுங்கள். துஆவிலிருந்து பயனடையுங்கள். அதுவன்றி வெற்றிக்கு உறுதியே இல்லை. அதுவன்றி நமது இலக்கை அடைய இயலாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் தெளிவுபடுத்தியுள்ளார்கள். துஅவின் மூலமே நமது வெற்றி கிடைக்கும். ஆனால் அத்துடன் தப்லீகின் பக்கமும் கவனமூட்டியுள்ளார்கள். முயற்சியுடன் துஆவும் இருக்கும் எனில் பலன் பெறலாம். துஆவுடன் நமது தகுதிகளின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். தப்லீக் செய்வதன் பக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கவனமூட்டியதுடன் தப்லீக் செய்பவர்களின் அமலின் நிலையை சரியாக்குவதன் பக்கமும் கவனமூட்டினார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: **வமன் அஹ்ஸனு ^q^கவ்லம் மிம்மன் ^d^தஆ இலல்லாஹி வஅமில ஸாலிஹவ் வ^q^கால இன்னனீ மினல் முஸ்லிமீன்** – அல்லாஹ்வின் பால் மக்களை அழைத்துத் தம்முடைய நம்பிக்கைக்கேற்ப செயலாற்றி, நான் கட்டுப்பட்டு நடப்பவர்களைச் சேர்ந்தவனாவேன் எனக் கூறுபவரை விடவும் மிகச் சிறந்ததனைக் கூறுபவன் எவன்? (41:34)

எனவே அல்லாஹ் கூறியுள்ளான். நீங்கள் மிகச் சிறந்த ஒரு பணி செய்வீர்கள் எனில் அது அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்ற பணி தான். என்ன வாய்ப்புகள் கிடைக்கின்றனவோ அதனை பயன்படுத்துங்கள். வாய்ப்பு கிடைத்தால் இறைவன் பக்கம் அழைப்பவர்களுடன் சேர்ந்து கொள்ளுங்கள். இறைவன் பக்கம் அழைப்பதற்கு உங்கள் அமல்களையும் கண்காணித்து வர வேண்டும். இறைவன் செய்யுமாறு கூறிய செயல்களை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

திருக்குர்ஆனில் எண்ணற்ற கட்டளைகள் உள்ளன. அவற்றுள் சில செய்யுமாறு முஃமினை ஏவக்கூடிய கட்டளைகள். சில, செய்ய வேண்டாம் என்று ஒரு முஃமினை தடுக்கின்ற கட்டளைகள்.

எனவே ஒரு மனிதன் இறைவன் தடுத்தவற்றிலிருந்து விலகியும் இறைவன் செய்யச் சொன்ன வேலைகளை செய்தும் வருவதற்கு பெயர்தான் அஃமாலே சாலிஹா ஆகும்.

நாம் ஆய்வு செய்து பார்த்தால் பல செயல்களை நாம் அலட்சியமாக விட்டு விட்டது தெரிய வரும். அன்றாட வீட்டு விவகாரங்கள், சமூக விவகாரங்கள், ஜமாஅத் அமைப்புக்கு கட்டுப்படுதல் சம்பந்தமானவை, இபாதத் செய்யும் விஷயங்கள் இவை அனைத்திலும் ஒரு தாயி இலல்லாஹ்வுக்கு கவனம் இருக்க வேண்டும். அல்லாஹ் நற்செயல் செய்வதை ஒரு முக்கியமான நிபந்தனையாக்கியுள்ளான். உங்களிடம் நற்செயல் இருக்கும் போதுதான் மற்றவர்களை நன்மையின் பக்கம் அழைக்க முடியும். அல்லாஹ்வுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அடியார் இக்காலத்தில் சீர்திருத்துவதற்காக வந்துள்ளார். நான் இறைவனின் திருப்தியைப் பெறத்தக்க வழியை எனக்கு காட்டினார். அதன் மூலம் நான் நிம்மதி பெறுகிறேன் என்று கூறி மக்களை அழைக்கிறார். நான் இவ்வாறு முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வைத்துக் கொண்டு செல்கிறேன். உலகையும் ஆகிரத்தையும் பெறுவதற்கு இதன் பக்கம் நான் கவனமூட்டப்பட்டுள்ளேன். வாருங்கள்! நீங்கள் எனது பேச்சை கேளுங்கள். நான் கட்டுப்பட்ட அடியான் ஆவதற்கு முயற்சிப்பது போன்று நீங்களும் இந்த மார்க்கத்தின் பக்கம் வாருங்கள். உங்கள் உலகையும், மறுமையையும் முன்னேற்ற முயற்சி செய்யுங்கள் என்று கூறி உலக மக்களை நீங்கள் அழைக்க முடியும். எனவே ஒரு தாயி இலல்லாஹ்வுக்கு இது மிகவும் அவசியம்மாகும். தாயி இலல்லாஹ் (அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்) மற்றும் இதனை கவனத்தில் கொண்டால் போதாது. மாறாக ஒவ்வொரு அஹ்மதிக்கும் இது அவசியமாகும். அவர் நல்ல செயல்பாடுள்ள அஹ்மதியாக இல்லாவிட்டாலும், உலகின் பார்வையில் அவர் அஹ்மதியாகவே கருதப்படுகிறார். இந்த மனிதர் அஹ்மதி என்று சமூகம் கூறுகிறது. அஹ்மதி என்ற சொல்லை தன்னுடன் வைத்திருப்பவர் கண்டிப்பாக இதனை நினைவில் கொள்ள வேண்டும். அவர் தப்லீக் செய்யா விட்டாலும் கூட அவரது அமைதியும் கூட ஒரு தாயி இலல்லாஹ்வாகவே அவரைக் காட்டும். சில வேளைகளில் எனக்கு அஹ்மதியல்லாதவர்கள், முஸ்லிம் அல்லாதவர்களிடம் இருந்தும் கூட கடிதம் வருகிறது. ஜமாஅத்தின் நற்செயல் பற்றி நான் கேள்விப்பட்டேன். உண்மையாளர்கள் என்று நீங்கள் வாதிக்கின்றீர்கள். ஆனால் இந்த அஹ்மதி என்னை ஏமாற்றி விட்டார். எனது உரிமையை பெற்றுத் தாருங்கள் என்று எழுதுகின்றனர். அஹ்மதியின் ஒரு செயல் முழு ஜமாஅத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்தி விடுகிறது. எனவே அல்லாஹ் மனித இயல்பின் பாதாளம் வரை தெரிந்திருக்கின்றான். அவனைப் போன்று படைப்பினங்களைப் பற்றி தெரிந்தவர் யாரும் இல்லை. அவனே படைத்தான்.

அவன் கூறுகின்றான்: தஃவத்தே இலல்லாஹ்வை விட சிறந்த பணி எது என்று கேட்கின்றான்? தஃவத்தே இலல்லாஹ் (அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்) செய்பவர் அஃமாலே சாலிஹா (நற்செயல்) செய்யவும் முயற்சி செய்ய வேண்டும்.

நான் முழுமையான கட்டுப்பட்ட அடியானாக உள்ளேன். முழுமை பெற்ற அடியானாக முயற்சி செய்து வருகிறேன் என்று அறிவிப்பு செய்யுங்கள். முஸ்லிம் – அஹ்மதி என்று வெறும் லேபிள் மட்டும் ஒட்டப்படவில்லை. மாறாக முழுமையாக கட்டுப்பட்டவனாக உள்ளேன்; அதற்காக முயற்சியும் செய்கிறேன். அல்லாஹ்வுக்குரிய கடமைகளின் பக்கமும் அடியார்களின் உரிமைகளின் பக்கமும் கவனம் செலுத்தும் போதுதான் கட்டுப்பட்டவராக ஆக முடியும். நினைவில் கொள்ள வேண்டும். முஸ்லிம் கட்டுப்பட்டவனாக இருப்பது இபாதத்துடன் தொடர்புடையதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முஸ்லிம் என்பவர் துஆ மற்றும் சதகாவின் மீது நம்பிக்கை ஒப்புக் கொண்டிருப்பவர்கள் ஆவர். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் கஃபா இல்லத்தின் சுவர்களை

எழுப்பிய போது துஆ செய்தார்கள். ஓர் உன்னத நபியை அனுப்ப வேண்டும் என்று வேண்டினார்கள். அந்நபி அல்லாஹ்வின் வசனங்களைப் படித்துக் காட்ட வேண்டும். வேதத்தின் அறிவையும் ஞானத்தையும் கற்பிக்க வேண்டும். நஃப்ஸ்களை தூய்மையாக்க வேண்டும். இந்த துஆ செய்வதற்கு முன் தமக்காகவும் தமது குழந்தைகளுக்காகவும் துஆ செய்தார்கள்.

**ரப்பனா வஜ்அல்னா முஸ்லிமைனிலக வமின் ஸுர்ரியத்தினா உம்மத்தம் முஸ்லிமத்தல்லக வஅரினா மனாஸிகனா** – **எங்களுடைய இறைவா! எங்கள் இருவரையும் உனக்குக் கட்டுப்படக்கூடிய (அடிய)வர்களாக விளங்கச் செய்வாயாக. எங்களுடைய வழித்தோன்றல்களிலிருந்தும் உனக்குக் கட்டுப்படக்கூடிய ஒரு சமுதாயத்தை(த் தோற்றுவிப்பாயாக). (2:129)**

ஏனெனில், இபாதத் இல்லாமல் நோக்கத்தை பூர்த்தி செய்ய இயலாது. எனவே நபிமார்கள் வருகின்றனர். முஸ்லிம்களுள் முதன்மையானவரும் முழுமையானவருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் அதற்காகவே வந்தார்கள். அல்லாஹ்வுடைய போதனைகளைப் புரிவதற்கு நஃப்ஸ் தூய்மையாக இருக்க வேண்டும். நஃப்ஸ் உடைய தூய்மை ஏற்படுவதற்கு இபாதத்தில் ரசனை ஏற்பட வேண்டும். இறைவன் வழிகாட்ட வேண்டும். அவனால் ஒப்புக் கொள்ளப்படத்தக்க இபாதத்தை அவனே காட்டித் தர வேண்டும். அஹ்மதிகளின் நற்பேறு நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஈமான் கொண்டுள்ளோம். அவர்கள் இபாதத்தின் வழியை கற்றுத் தந்துள்ளார்கள். அது அல்லாஹ்விடத்தில் ஒப்புக்கொள்ளத்தக்கதாகும். பிறகு நமது இன்னொரு நற்பேறு அல்லாஹ்வுடைய நெருக்கத்தை பெறுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை பேரன்பரை ஒப்புக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அவர்கள் நம்மை மீண்டும் மீண்டும் இபாதத்துகளின் பக்கம் கவனமூட்டினார்கள். தஃவத்தே இலல்லாஹ்வுக்காக இல்மை பெறும் அதே வேளையில் தமது அஃமால் (நற்செயல்களையும்) சரியாக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தினார்கள். அல்லாஹ் கட்டளையிட்ட படி அமல் செய்யுங்கள். துஆ மற்றும் இபாதத்துகளில் அழுத்தம் கொடுங்கள். ஒவ்வோர் அஹ்மதியும் தன்னை அஹ்மதி என்று கூறுகிறார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் தொடர்புடையவராக காட்டுகிறார். பிறகு அவர் தனது செயல்களை சீர்படுத்த வேண்டும். அவரது சீர்திருத்தம் ஒவ்வொருவருக்கும் தென்பட வேண்டும். அவரை செயல்பாடுள்ள ஒரு தாயி இலல்லாஹ்வாக ஆக்கத்தக்க மார்க்க அறிவு எதுவும் இல்லாவிட்டாலும் அவரது ஒவ்வொரு சொல்லும் செயலும் மற்றவரை ஈர்த்து விடுகிறது.

நற்செயல்கள் இருந்தால் நன்மைகளால் ஈர்க்கப்பட்டு மக்கள் அருகில் வருவர். நன்மைகள் இல்லா விட்டால் ஷய்த்தான் அவனை பிடித்து விடுவான். இக்காலத்தில் எல்லா பக்கமும் அத்தகைய மக்கள் பரவியிருப்பதை பார்க்கிறோம். மற்றவர்களை தமது ஆதிக்கத்தில் கொண்டு வர முயற்சி செய்கின்றனர். தமது இலக்கை அடைய அவர்களை பயன்படுத்த நினைக்கின்றனர். பிறகு தீமைகளில் ஈடுபட்டு ஓர் அஹ்மதி அவர்களின் பிடியில் மாட்டிக் கொண்டால் பிறகு ஜமாஅத்துகளுக்கும் கெட்ட பெயர் ஏற்பட காரணமாகி விடுகிறார்.

நான் ஏற்கனவே கூறியது போன்று பாகிஸ்தான் அஹ்மதிகள் – இதனைப் பற்றி முன்னரும் கூறியுள்ளேன். அந்நாட்டை விட்டு வெளியேறுவது அஹ்மதிகளாக இருப்பதால் மட்டும்தான். எனவே அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவாறு இங்கு உலகை சம்பாதிப்பதுடன் வாரத்தில் சில மணி நேரம் குறைந்தபட்சம் ஒரு நாளாவது தஃவத்தே இலல்லாஹ்வுக்காக வெளியேறுங்கள். இங்கு சில நூறு அஹ்மதிகள் செயல்திறன் உள்ளவர்களாகி விட்டால் தப்லீகின் வேகம் பன்மடங்கு அதிகமாகி விடும். ஜமாஅத் அளவிலும் தப்லீக் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுங்கள். கிளை அமைப்புகள் மூலமாகவும் தப்லீக் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள். குறைந்தபட்சம் ஒரு சிறு பகுதியிலாவது ஜமாஅத்தைப் பற்றிய ஓர் அறிமுகம் ஏற்படும். நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த மக்களுக்கு மார்க்கத்துடனும் தொடர்பில்லை. இவர்களின் ஒரு பிரிவினருக்கு இறை இருப்பின் மீது கூட நம்பிக்கை இல்லை.

எனவே எல்லா வகையான மக்களுக்கும் தப்லீக் செய்ய வேண்டியுள்ளது. நிச்சயமாக இங்குள்ள மக்கள் மார்க்கத்தை விட்டு விலகியிருந்தும் கூட கத்தோலிக்கர்களின் தாக்கத்தின் கீழ் ஒரு நீண்ட காலம் கிறித்தவத்தின் கீழ் இருந்த காரணத்தால் அநீதியாக முஸ்லிம்களை பலவந்தப்படுத்தி கிறித்தவர்களாக்கியதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இப்போதும் சில கூட்டத்தாரிடம் அந்த தாக்கம் காணப்படுகிறது. இக்காரணத்தால் இஸ்லாத்தைப் பற்றி இம்மக்கள் கேட்கவும் விரும்பவில்லை. தொடர்பும் இல்லை. பயப்படவும் செய்கின்றனர். ஆனால் இப்போது சில இடங்களில் கிறித்தவ மார்க்கம் பற்றி ஒரு அதிருப்தியும் நிலவுகிறது. டாக்டர் மன்சூர் சாஹிப் என்னிடம் கூறினார்கள்.

இங்கு 400 வருட விழா கொண்டாடப்படுகிறது. அதில் ஒரு பகுதி இவ்வாறும் உள்ளது. நாம் பெருமளவில் முஸ்லிம்களை கிறித்தவராக்கி விட்டோம். பெருமளவில் கொன்றுவிட்டோம். அதற்கு அவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். ஆக இந்த உணர்வு இப்போது அவர்களிடம் ஏற்பட்டுள்ளது. இன்னும் அதிகமாக இந்த உணர்வு அவர்களிடம் எழுவதற்கு நம்மிடம் Literature -களும், முயற்சியும் தேவைப்படுகிறது. இஸ்லாத்தின் அழகிய போதனை என்னவென்றால், அன்பு, நேசத்துடன் வாழ்தல் மார்க்கத்தை கண்ணியத்துடன் நடத்துதல் ஆகும். இங்கு நடந்தவை அனைத்தும் அநீதியேதான். இது இங்கு அறிமுகம் ஏற்படக் காரணமாக அமையும். கிறித்தவத்தின் மீது தாக்குதல் தொடுக்க வேண்டிய தேவையில்லை. இஸ்லாத்தின் அழகிய போதனையை எடுத்துச் சொல்வதே இங்கு தேவைப்படுகிறது. அதிகமதிகம் இஸ்லாத்தைப் பற்றி இங்கு அறிமுகப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்து கிறித்தவத்தின் திசையை இஸ்லாத்தின் பக்கம் திருப்பி, இஸ்லாமே உலகிற்கு ஈடேற்றம் தரக்கூடியது என்று காட்டினார்கள் என்பதை எடுத்துக் கூற வேண்டும். இந்த சூழ்நிலையை இறைவன் இங்கு உருவாக்கி இருக்கும் போது அதிலிருந்து பயனடையுங்கள். இஸ்லாத்தை பரப்பும் பொறுப்பு யாரிடம் தரப்பட்டுள்ளதோ அவர்களுக்கு வாய்ப்பும் தரப்பட்டுள்ளது. இந்த நாட்டில் மறைந்து போய் விட்ட இஸ்லாத்தின் மேன்மையை திரும்பவும் நிலைநாட்டுங்கள்.

இங்கு வாழும் ஒவ்வோர் அஹ்மதிக்கும் தஃவத்தே இலல்லாஹ் நமது பொறுப்பு என்ற உணர்வு ஏற்படும் போதுதான் இந்நிலை ஏற்படும்.

இம்மக்களுக்கு மார்க்கத்துடன் எந்த தொடர்பும் இல்லை. அல்லது கத்தோலிக்க தாக்கத்தால் இஸ்லாமிய போதனைகளைக் கேட்க விரும்பவில்லை என்று கூறி விட்டு விடாதீர்கள்.

40-50-60 வருடங்கள் முன்பு எவராவது கற்பனையாவது செய்து பார்த்திருக்க முடியுமா? இங்கு இஸ்லாத்தை சுதந்திரமாக எடுத்துச் சொல்ல முடியும் என்று யாராவது கற்பனை செய்திருப்பாரா? அல்லது நாம் மஸ்ஜித் இங்கு கட்ட முடியும் என்று கற்பனை செய்திருக்க முடியுமா? முஸ்லிம்களுக்கு செய்த அநீதிகளை நினைத்து இம்மக்கள் வெட்கப்படுவர் என்றுதான் யாராவது கற்பனை செய்திருக்க முடியுமா? மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கூறுவதை யாராவது கற்பனைதான் செய்திருக்க முடியுமா? எனவே இதெல்லாம் இறைவனுடைய வேலை ஆகும். நல்லியல்பு கொண்டோருக்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று அவன் நாடும் போது அதற்கான காற்று வீசத் தொடங்குகிறது. மக்கள் கவனம் நம் பக்கம் ஈர்க்கப்பட தொடங்கி விடுகிறது. உள்ளங்களை ஈர்க்க வைப்பது இறைவனது வேலையாகும். நபிமார்களின் ஜமாஅத்துடன் சேர்ந்து தப்லீக் செய்வது மனிதர்களின் வேலையாகும். எனவே இந்த நாட்டின் சூழ்நிலைக்கேற்ப தப்லீகிற்கான புதிய புதிய வழிகளை தேடுங்கள். முரப்பிகள் வாரத்தில் ஒரு நாள் அல்லது வருடத்தின் சில நாட்கள் தப்லீக் நிகழ்ச்சிகளை ஏற்படுத்துவதால் நமது தூதுச் செய்தியை முழுமையாக கொண்டு சேர்த்துவிட இயலாது. பரந்த தைரியமான திட்டமிடுதல் தேவை. இலக்கு நிர்ணயித்துக் கொள்வது அவசியமாகும். மக்கள்தொகையில் 1-2 சதவீதம் மக்களுக்காவது வருடத்தில் குறைந்தபட்சம் அஹ்மதிய்யத் பற்றிய அறிமுகம் செய்து விட வேண்டும். இந்த முயற்சி நடைபெறுகின்ற பகுதிகளில் அல்லாஹ்வின் அருளால் பெரும் வெற்றி வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காக நான் ஏற்கனவே கூறியது போன்று முரப்பிமார்களும் ஜமாஅத் அமைப்பும்,

கிளை அமைப்புகளும் ஒன்றுகூடி செல்லுங்கள். அல்லாஹ் நபிமார்களுக்கு கூட இந்த வேலையை கொடுத்திருந்தான். இந்த வேலை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த வேலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பொறுப்பிலும் தரப்பட்டது. உங்கள் பணி தூதுச் செய்தியை எடுத்து வைப்பது மட்டும் தான்.

அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான்: **ஃபயின் அஃரலூ ஃபமா அர்ஸல்னாக்க அலைஹிம் ஹஃபீலா. இன்அலைக்க இல்லல் பலாக்** - **ஆனால் அவர்கள் புறக்கணிக்கிறார்களென்றால் நாம் உம்மை அவர்களைக் காப்பாற்றுபவராக அனுப்பவில்லை; (தூதுச் செய்தியினை) எடுத்துரைப்பதே உமது கடமையாகும். (42:49)**

இந்த கடமையைத்தான் அஹ்மதிகள் ஒவ்வொரு நாட்டிலும் செய்ய வேண்டியுள்ளது. இந்தக் கடமையைத்தான் நீங்கள் இந்த நாட்டில் செய்ய வேண்டியுள்ளது. பெரும் பெரும் நூல்களை தர வேண்டிய தேவை ஒன்றும் இல்லை. இரு காகிதங்கள் அச்சடியுங்கள். ஒன்றில் அஹ்மதிய்யத்தைப் பற்றிய அறிமுகம், MTA Address, Website விபரங்கள் அதில் இருக்க வேண்டும். ஆர்வமுள்ளவர்கள் பிறகு தாமே கவனம் செலுத்துவர். அதே போன்று எங்கெல்லாம் அஹ்மதிகள் இருக்கின்றார்களோ அப்பகுதியின் முக்கிய பிரமுகர்களை தொடர்பு கொள்ளுங்கள். தலைமையகத்தில் இருந்து வந்த வழிகாட்டலுக்கு ஏற்ப வேலை நடந்ததால் மஸ்ஜித் ப-ாரத் கட்டப்பட்டு 18 வருடங்கள் ஆகிவிட்டது. அதன் மூலமாவது உங்களைப் பற்றிய அறிமுகம் இப்பகுதியில் ஏற்பட்டிருக்கும். இப்பகுதியில் மஸ்ஜித் கட்டுவதற்கு தடை ஏற்பட்டுள்ளது. தொடர்புகளை சரியாக வைத்தால் அந்த தடைகள் மிக தூரத்தில் விலகிப் போயிருக்கும். ஆனால் நாம் அந்த நேரத்தில்தான் முயற்சி செய்கிறோம். ஆனால் சிறந்த திட்டமிடுதலுடன் முன்பே யோசித்து நல்ல தொடர்புகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எனவே நமது யோசனைகளையும் கூட மாற்ற வேண்டும்.

வருடத்தில் சில குழுக்கள் இங்கு வருகின்றன. இந்த மஸ்ஜிதின் 18 வருட விழாவுக்கு வந்துள்ளோம் என்று கூறுவது வெற்றியாகாது. எந்த இலக்கையும் நீங்கள் வெல்லவில்லை. Literature –களும் உங்களிடம் போதிய அளவில் இல்லை. இன்று மக்களுக்கு சாந்தி மற்றும் சமூக பிரச்சனைகளைப் பற்றி கேட்கும் ஆர்வம் உள்ளது. ஜிஹாதின் பெயரால் இஸ்லாத்திற்கு கெட்ட பெயர் உண்டாக்கப்படுகிறது. அதுபற்றி கேட்கும் ஆர்வம் உள்ளது. அதன் அடிப்படையில் Literature தயார் செய்ய வேண்டும். நம்மிடம் கருத்துகள் உள்ளன. மொழிபெயர்க்கும் தேவை மட்டுமே உள்ளது. நான் ஏற்கனவே கூறியது போன்று பெரு நகரங்களை விடுத்து கிராமப் பகுதிகளில் சென்று மாநாடுகள் செமினார்கள் நடத்துங்கள். அதற்கு முன் அங்கு சென்று அறிமுகம் செய்து கொள்ளுங்கள். அங்குள்ள மார்க்கத் தலைவர்களை அழையுங்கள். நாங்கள் ஒரு மாநாடு நடத்தப் போகிறோம். ஒவ்வொரு மார்க்கத்தவரும் வந்து தத்தமது மார்க்கத்தின் சிறப்புகளை கூற வாருங்கள் என்று அழைப்பு விடுங்கள். பல்வேறு தலைப்புகளும் கூட நீங்களே தேர்ந்தெடுக்கலாம். செயலர்களின் தஃவத் மற்றும் தப்லீக் அமைப்புகள் செயல்திறன் கொண்டிருந்தால் ஜமாஅத் அமைப்பு செயல்திறன் உள்ளதாக இருந்தால் ஒரு Hall வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம். எண்ணற்ற வழிகள் உள்ளன. முபல்லிக்குகள், கிளை அமைப்புகள் Active ஆக இருந்தால் நிறைய வேலைகள் செய்யலாம். இங்கு சோம்பேறித்தனம் காணப்படுகிறது. எல்லா பிரிவிலும் காணப்படுகிறது. தூதுச் செய்தியை எட்ட வைக்கும் வேலையை செய்து முடித்து விட்டோம் என்று தற்போது நம்மால் வாதம் செய்ய முடியாது. இங்கு பயணிகள் அதிகமாக வருகின்றனர். சிறு சிறு பிரசுரங்கள் அவர்களுக்காக தயாரித்துக் கொடுக்கலாம். வாங்கி விட்டு கொஞ்ச தூரம் போய் எறிந்து விடுபவர்களும் இருப்பர் என்பது உண்மைதான். ஆனால் படிப்பவர்களும் இருப்பர். எனவே நமது பணி நமது பொறுப்பை நிறைவேற்றுவதுதான். கையைக் கட்டிக் கொண்டு நாம் இருந்து விட்டால் Response நன்றாக இருக்காது. இறைவன் அப்படி சொல்லவே இல்லையே? நீங்கள் தப்லீக் செய்யுங்கள். நிச்சயமாக நல்ல பலன் ஏற்பட்டே தீரும் என்று சொல்லவில்லை. மாறாக, அல்லாஹ் கூறுகிறான்:

**இன்னக்க லா தஹ்தீ மன்அஹ்பப்த வலாகின்னல்லாஹ யஹ்தீ மய்ய-ாவு** – நீர் விரும்பியவர்களை நேர்வழியில் செலுத்த நிச்சயமாக உம்மால் முடியாது. மாறாக அல்லாஹ் தான் விரும்புபவருக்கு நேர்வழி காட்டுகின்றான். (28:57)

எனவே உலகை சீர்திருத்துவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இருந்த துடிப்பையும், துஆவையும் பார்த்து தான் நேர்வழி கொடுப்பது அல்லாஹ்வின் வேலை என்று கூறினான். அல்லாஹ் யாருக்கு விரும்புவானோ, யாரிடம் நல்லியல்பு இருக்குமோ அவருக்கு ஹிதாயத் கிடைக்கும். உங்கள் வேலை தப்லீக் செய்வதும் துஆ செய்வதும் ஆகும் என்றான்.

நமது ஒவ்வொரு முயற்சிகளுக்கும் கண்டிப்பாக பலன் கிடைத்தே ஆக வேண்டும் என்று நாம் எப்படி சொல்ல முடியும்? சான்றுகளை பூர்த்தி செய்வது உங்களது வேலையாகும். அதனை செய்யுங்கள். பிறகு துஆவில் வேகம் காட்டுங்கள். அல்லாஹ் உங்களின் குறைகளை திரையிட்டு மறைப்பானாக. உங்களது குறைகளை கண்டும் காணாமல் விட்டுவிடுவானாக. உங்களது முயற்சிகளை ஏற்றுக் கொள்வானாக. நாம் இந்த துஆவையே செய்து வர வேண்டும். நமது முயற்சிகள் சரியான முறையில் இருந்தால் மற்ற பணிகள் இறைவனுடையதாகும். முயற்சி, துஆ ஆகியவற்றின் முன்மாதிரியையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டியுள்ளார்கள். அதனையே நாம் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக நான் இன்னொன்றும் கூற விரும்புகிறேன். வக்ஃபே நவ் குழந்தைகளின் எண்ணிக்கை இங்கும் அதிகம் உள்ளது. அவர்கள் வாலிப வயதை அடைந்துள்ளனர். அவர்களை ஜாமிஆவுக்கு அனுப்புங்கள். ஏனெனில் இங்குள்ள மொழி தெரிந்த முபல்லிக்குகள் குறைவாக உள்ளனர். இங்கும் இன்னும் உலகின் பல இடங்களிலும் ஸ்பானிஸ் மொழி பேசப்படுகிறது. அவர்கள் வரை தூதுச் செய்தியை கொண்டு செல்லும் கடமையை நிறைவேற்ற வேண்டியதுள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனக்கு எத்தகைய மக்கள் தேவையெனில் வெறும் நாவளவில் அன்றி செயல்ரீதியாக செய்து காட்டுபவர்கள் தேவைப்படுகின்றனர். வெறும் வாய் வார்த்தை எந்த பயனும் தராது. கர்வத்தை விட்டு விட்டு முற்றிலும் தூய செயல்பாடுகள் தேவை. பிறகு கூறினார்கள். தப்லீகிற்காக சுற்றுப்பயணம் செய்யவும் வேண்டும். தகுதி உள்ளவர்கள் இதற்காக இவ்வழியில் தமது வாழ்வை அர்ப்பணிக்கட்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபிகளும் கூட இஸ்லாத்தைப் பரப்புவதற்காக தொலைதூர நாடுகளுக்கும் சென்றனர்.

பிறகு ஐரோப்பிய நாடுகளில் தப்லீக் செய்வது குறித்து கூறினார்கள். இந்த நாடுகளுக்கு செல்பவர்களுக்கு அவர்களின் மொழி நன்றாக தெரிந்திருக்க வேண்டும். அவர்களின் சிந்தனை அவர்களிடம் எடுத்து வைக்கும் முறை நன்றாக தெரிந்தவராக இருக்க வேண்டும். அங்குள்ளவர்களுக்கு தான் இது சாத்தியமாகும். எனவே வக்ஃபே நவ் திட்டத்தின் கீழ் பெற்றோர்களுக்கு குழந்தைகளை வக்ஃப் செய்யும் வாய்ப்பை அல்லாஹ் வழங்கியுள்ளான். இளம் வயதிலேயே அந்த அடிப்படையில் தர்பிய்யத் வழங்குவதும் பெற்றோரின் கடமையாகும். ஜாமிஆவுக்கு அவர்களை அனுப்ப வேண்டும். இங்குள்ள மொழியிலும் வாழ்க்கை முறை பற்றி தெரிவதிலும் நல்ல முயற்சி எடுக்க வேண்டும்.

ஜமாஅத்திற்காக தப்லீக் செய்யும் வேலை சில வருடங்கள் அல்லது 10 வருடங்கள் நடக்கும் வேலையல்ல. நிரந்தரமாக தொடரும் பணியாகும்.

எனவே இங்கு குறுகிய கால அளவில் செய்யும் தப்லீக் நிகழ்ச்சிகளை தயார் செய்யுங்கள். பிறகு பரந்த அளவில் நீண்ட காலத்திற்கு பயன்படும் நிகழ்ச்சிகளையும் தயார் செய்யுங்கள். அப்போதுதான் நாம் தப்லீகின் கடமையை நிறைவேற்ற முயன்றவர்கள் ஆவோம். இதற்காக நாம் மனத்தூய்மையுடன் முயற்சி செய்ய

வேண்டும். நமது வாழ்வை தக்வாவால் நிரப்ப வேண்டும். பொறுப்பாளர்களுக்கு தமது பொறுப்பு மட்டும் நோக்கமாக இல்லாமல் இறைவன் தொண்டு செய்வதற்கு தந்த வாய்ப்பின் நோக்கத்தையும் விளங்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சொல்லும் செயலும் ஒன்றாக இருந்தால்தான் அல்லாஹ்வைப் பற்றிய பயம் மனிதனிடம் இருக்க முடியும். உள்ளம் தூய்மையற்று இருந்தால் சொல் என்ன தான் தூய்மையாக இருப்பினும் அவ்வுள்ளம் இறைவனின் பார்வையில் மதிப்பு பெறாது. பழம் தரும் மரம் ஆவதற்காகவே அவர்கள் என்னிடம் வந்துள்ளனர் என்பதை எனது ஜமாஅத்தினர் புரிந்து கொள்ளட்டும்.

ஒவ்வொருவரும் தமது அகநிலை எவ்வாறு உள்ளது என்று தம்மைத்தாமே ஆய்வு செய்யட்டும்.

ஒவ்வொரு அஹ்மதியிடம் பழம் இரு வகையில் உருவாகிறது. ஒன்று தமது நிலையை மாற்றுவதற்காக இன்னொன்று தமது சந்ததிகளை அஹ்மதிய்யத்தில் நிலைநாட்டி தக்வாவில் நிலை நாட்டுவதற்காக மேலும் தூதை எடுத்து வைத்து இஸ்லாத்தின் அழகிய போதனை மூலம் உலகை ஒளியூட்டுவதற்காக ஒவ்வொரு அஹ்மதிகளிடமும் பழம் உருவாக வேண்டும்.

ஒரே மரத்தில் பல்வேறு வகை பழம் காணப்படுகிறது. இது ஒவ்வோர் அஹ்மதியும் யோசிக்க வேண்டிய இடம். அல்லாஹ் நமக்கு தவ்ஃபீக் தருவானாக. நாம் அவனது போதனையின்படி அமல் செய்வோமாக. நமது சொல் செயல் முரண்படாதிருக்கட்டுமாக. அவனுடைய உதவியை பெறுவோமாக. அவனது திருப்தியை பெறுவோமாக. இக்காலத்தில் நியமிக்கப்பட்டவர் மூலம் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்து வைக்கும் பொறுப்பு தரப்படுகிறது. அதனை நல்ல முறையில் செய்பவர்களாவோமாக.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BASHARATH MOSQUE, SPAIN,**

**ON 09.04.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**